## நில மேம்பாடு மண்வளப்பாதுகாப்பு மற்றும் நீர் பிடிப்பு பகுதி மேம்பாடு

**( இனம் - 2 (ஆ )**

இப்பகுதியில், இரண்டு இனங்களுக்கான (இனம் 2 மற்றும் 3) செயல்தொடர்புகள் மேற்கொள்ளப் படுகின்றன. நில மேம்பாடும், மண்வளபாதுகாப்பும் (இனம் 2) மற்றும் நீர் பிரிமுகடு (Water Shed) மேம்பாடு (இனம் 3) ஆகியவை ஒன்றொடொன்று தொடர்புடைய இனங்கள். இருந்தபோதிலும், இரண்டு இனங்களின் ஏனைய பொருட்களான, நிலச்சீர்திருத்தமும் தொகுப்பும் (இனம் 2) மற்றும் சிறுபாசனமும், நீர் நிர்வாகமும் (இனம் 3) தனியாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டு சிறப்பு பொருட்களும் தொடர்புடையதாக இருப்பினும், திட்டச்செயலாக்கம், அமைப்பில் பங்கேற்பிலும், நிதி முறையிலும் வேறுபடுகின்றன. ஆகையால், இவை விரிவான முறையில் விவரிக்கப்படுகின்றன.

### நீர் பிரிமுகடு மேம்பாடு:

02. நீர் பிரிமுகடின் கோட்பாடானது, நீர் நிலையை ஏற்படுத்துவதையும், பயிர் உற்பத்தித்திறன், குடியானவர்களின் வருவாய் ஆகியவற்றை அதிகரிப்பதற்காக மண்வளப் பாதுகாப்பையும் குறிப்பிட்டுக் காட்டுவதாகும். இவ்வாறாக, முன்னேறிய விவாசாயத் தொழில்நுட்பம் 1000 எக்டேர் அளவிலான நுண்ம நீர் பிரிமுகடுகள் மீது வளர்ச்சியுற்றிருப்பதுடன் வலியுறுத்தவும் செய்கிறது. வறட்சிப் பகுதி மேம்பாட்டு திட்டம், வானம் பார்த்த நிலப்பகுதிகளுக்கான தேசிய நீர் பிரிமுகடு வளர்ச்சித் திட்டம், உலக வங்கி உதவியுடனான ஒருங்கிணைந்த நீர் பிரி முகடு மேம்பாட்டுத் திட்டம், டானிடா நிதியுதவிடனான விரிவான நீர் பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற பல நீர் பிரிமுகடு திட்டங்களைத் தமிழ்நாடு செயற்படுத்திக் கொண்டிருக்கிறது. பயிரை வளர்க்க உயர்வகைக் கன்றுகளைப் பயன்படுத்துதல் மற்றும் தரிசு நில பண்ணை தொழில் நுட்பங்கள், வனப்பண்ணைகள், தோட்டப்பயிர், பட்டு வளர்ப்பு போன்றவற்றிற்கு சிறப்பு அமைவிடம் மூலம் மண் அரிப்பைக் கட்டுப்படுத்தவும் மழை நீரை இயன்ற அளவு அதிகமாகப் பயன்படுத்தவும், பயிர் வளர்ச்சிக்குரிய மண்ணையும் நீரையும் வழங்க இத்திட்டங்கள் வகை செய்கிறது. இத்திட்டங்கள் ஏனைய துணைத் தொழில்களினால் விவாசாயிகளின் வருவாய் நிலையைப் பெருக்க மேலும் ஊக்குவிக்கிறது. நீர்பிரி முகடு மேம்படுத்தலின் நோக்கமானது இயற்கை வள ஆதாரங்களைப் பாதுகாப்பது என்றாலும், உள்ளூர் மக்களின் சுற்றுச் சூழல் மேம்பாட்டையும் சமூகப் பொருளாதார வளர்ச்சியையும் குறிப்பதுடன் இத்திட்டங்களில் மண், நீர், இவற்றின் பாதுகாப்பு உட்பட இயற்பியல் உள்தொடர்புகள் மட்டுமின்றி பொருளாதார சமூக நிறுவன கூறுகளையும் கருத்தில் கொள்ளப்பெற்றுள்ளது. நீர்பிரிமுகடு மேம்பாட்டின் பெரும்திறன் செயலாக்கத்திற்கு நிலமேம்பாடும் மண்வள பாதுகாப்பும் வழிமுறைகளாக மேற்கொள்ளப்படுகிறது. மேலே கண்ட நோக்குடன் மாநிலத்தில் பின்வரும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது சுருக்கமாக எடுத்து உரைக்கப்படுகின்றன.

### வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிக்கான திட்டம்:

03. இது ஒரு மைய அரசின் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் திட்டம் ஆகும். மைய மாநில அரசுகளால் 50 : 50 என்கிற அடிப்படையில் திட்டத்திற்கு செலவு செய்யப்படுகிறது. இது மாநிலத்தில் 1972–73 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டுவருகிறது. 1995–96ம் ஆண்டிலிருந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி திட்டம் 43 வட்டாரங்களிலிருந்து 80 வட்டாரங்களாக உயர்ந்துள்ளது. அனுமந்த ராவுக் குழுவின் அறிக்கையினுடைய அடிப்படையில் இத்திட்ட மாற்றங்களை உள்ளடக்கியும் செயல்பாட்டு முறையில் மாற்றங்கள் மேற்கொண்டும் இருக்கிறது. இத்திட்ட நோக்கினை அடைய நீர்பிரி முகட்டு செயலாக்கத்தை மேற்கொள்கிறது.

## தரிசு நில மேம்பாட்டுத்திட்டம் :

04. இத்திட்டத்தின் நோக்கம் தரிசு நிலத்தினுடைய நிரந்தர வளர்ச்சிக்கென செயல்படுவதற்கு நீர் பிரிமுகடு அடிப்படையில் உள்ளூர்ச் சமுதாயத்தினரின் செயல் திற ஆதரவுடன் கூடிய, பங்கெடுக்கச் செய்வதாகும். இத்திட்டம் உள்ளூர் கால் நடைகளின் உணவு தேவைக்கும் உள்ளூர் மக்களின் வேலை வாய்ப்புக்கும் உள்ளூர் மக்களின் பழங்கள், கால்நடை தீவனம், மரம், எரிபொருள் தேவைகளுக்கும் தரிசு நிலங்களில் அதிக அளவு மரங்களை நடுவதன் மூலம் பல விதமான மரங்களின் தொகுதிகளை உருவாக்குவதை உறுதி செய்து பசுமை சூழலை உண்டாக்குவது. இது மைய அரசின் ஆதரவுடன் இந்திய அரசினால் நிதியுதவி அளிக்கப்படும் திட்டமாகும்; மாநில அரசு இத்திட்டத்தின் கீழ் அதிக அளவு தரிசு நிலங்களை கொண்டு வருவதில் முக்கியத்துவம் அளித்து வருகிறது. அரசு சாரா நிறுவனங்கள், விருப்பமுள்ள விவசாயிகள், கூட்டாண்மை அமைப்புகள், தனியார் தொழில் முனைவர்கள் இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுகின்றன. இவற்றில் பல தன்னார்வ நிறுவனங்கள் மான்ய உதவி திட்டத்தின் கீழும் முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழும் திட்ட கருத்துருக்களை அனுப்பி இருக்கின்றன. அண்மைக் கால திட்டங்களுள் தமிழ் நாட்டிற்காக ஏற்பளிக்கப்பட்டகந்தர்வ கோட்டை திட்டமும் ஒன்றாகும். மத்திய அரசு புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த கந்தர்வ கோட்டை வட்டாரத்தின் 2155 எக்டேர் பரப்பில் ரூ.1.26 கோடி மொத்த செலவில் 5 ஆண்டு காலத்திற்கு ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு திட்டக் கருத்துருவினை ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.40.58 இலட்சங்கள் செலவில் தமிழ்நாடு தோட்டங்கள் நிறுவனத்தினரால் (திருவாளர்கள் டி.என். பிளான்டேசன்ஸ்) கருதப்பட்ட முதலீட்டு திட்டம் அனுப்பப்பட்டு ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆறு மாவட்டங்களுக்கான சில திட்டக் கருத்துருக்கள் மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவை 1995–96 லிருந்து செயற்பாட்டின் கீழ் இருந்துவருகிறது. அத்திட்டங்களின் விபரம் வருமாறு:

| மாவட்டத்தின் பெயர் | மொத்த பரப்பளவு (எக்டேரில்) | மொத்த செலவு (ரூ.இலட்சத்தில்) | திட்டகாலம் (ஆண்டுகளின்) | வட்டார /நீர் பிரிமுகடு பெயர் |
|---|---|---|---|---|
| 1) புதுகோட்டை | 2155 | 126.45 | 5 | கந்தர்வ கோட்டை |
| 2) பெரியார் | 4000 | 344.00 | 4 | குடியாலத்தாரில் 10 நீர்பிரிமுகடுகள் |
| 3) பசும்பொன் முத்து ராமலிங்க தேவர் | 3072 | 285.00 | 5 | காளையார் கோவில் |
| 4) தென்னாற்காடு | 3010 | 249.88 | 5 | கெடிலம் |
| 5) வடாற்காடு அம்பேத்கார் | 5000 | 296.04 | 3 | பொன்னையார் |
| 6) திருவண்ணாமலை சம்புவராயர் | 3900 | 255.94 | 4 | செங்கம் |

## ஒருங்கிணைந்த நீர் பிரிமுகடு மேம்பாட்டு திட்டம் :

05. மற்றுமொரு முக்கிய நீர் பிரிமுகடு திட்டமான, 54,000 எக்டேர் பரப்பிற்கு நீர்வழங்கக் கூடிய பாலாற்றிலும் வெள்ளாற்றிலும் உள்ள நீர் பிரிமுகடுகள், திட்டம் செயற்பாட்டிலுள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் நடத்தப்படும் தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நீர் பிரிமுகடுகளின் அடிப்படையில் மேலும் கூடுதலாக 36,000 எக்டேர் பரப்பளவிற்கான திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. நீண்ட காலத்திற்கு நிலையான மேம்பாட்டினை செய்யும் வகையில் சுற்று சூழல் குறைபாட்டை மாற்றியமைப்பது, திட்டப்பகுதியில் மானாவாரி நிலங்களில் பயிர் செய் நிலத்தையும், பயிர் செய்யப்படாத நிலத்தையும் மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## மானாவாரி பகுதி தேசிய நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம்

06. 1) உறுதியான உயிர் உரத்தின் நிலைத்த உற்பத்தியையும், 2) சுற்றுச்சூழல் சமன் பாட்டைத் தக்க வைத்தலும் மானாவாரி பகுதி தேசிய நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டத்தின் இரு நோக்கங்களாகும். மேம்பாட்டு திட்டம் 15 மாவட்டங்களில் ரூ.41.51 கோடி செலவில் 1990–91 முதல் 1996–97 வரையிலான 7 ஆண்டு காலத்திற்கு 84 நீர் பிரி முகடு பகுதிகளில் பரவலாக செயல்படுத்தப் பட்டுக்கொண்டு இருக்கிறது. ஒன்பதாவது திட்ட காலத்தில் (1997–2002). பெரியளவில் வலியுறுத்தப்பட்டு அதிக ஒதுக்கீடும் பெறுவதற்கு எதிர்பார்க்கப் படுகிறது. 1) அடிப்படை நடவடிக்கைகள் 2) பயிரிடப்படும் நில நடவடிக்கைகள் 3) பயிரிடப்படாத நில நடவடிக்கைகள் மற்றும் 4) கால்நடை நிர்வாகம் ஆகியவற்றைத் திட்டத்தில் உள்ளடக்கிச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. i) மண் வளத்தை (உரம்) பாதுகாத்தல் (ii) சிறிய தடுப்பு அணைகள், தாவர வேலிகள் போன்றவற்றை அமைப்பதன் மூலம் மழை நீரைப்பாதுகாத்தல் (iii) விவசாயிகளுக்கு துணைப்பணிகள் வழங்குவதன் மூலம் அவர்களது வருவாயை உயர்த்த வேலைவாய்ப்புகள் ஏற்படுத்துதல் ஆகிய முக்கிய பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊராட்சிகள். ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் முனைப்புடன் தம்மை நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக் கொண்டால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மானாவாரி பகுதி தேசிய நீர்பிரிமுகடு திட்டத்தின் செயலாக்க நடவடிக்கைகளை நல்லமுறையில் செயற்படுத்த முடியும்.

## விரிவான நீர்பிரிமுகடு மேம்பாட்டு திட்டம்:

07. திருநெல்வேலி கட்டபொம்மன், வ.உ. சிதம்பரனார் மாவட்டங்களிலும் மற்ற மூன்று மாவட்டங்களிலும் தரம்குறைந்த நிலங்களை மேம்படுத்துவது டானிடா நிதித் திட்டமாகிய இத்திட்டத்தின் நோக்கமாகும். முதற்கட்டமாகத் திருநெல்வேலி கட்டபொம்மன், வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில் ரூ.583 இலட்சங்கள் செலவில் 17861 எக்டேர் பரப்பளவில் 1994 வரை திட்டம் செயற்படுத்தப்பட்டது. டானிடாவுடன் 1994 மேயிலிருந்து ஜூலை 1994 வரை யிலான கால இணைப்பு ஏற்பாடுகளுடன் 1994 ஆகஸ்டிலிருந்து இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. இத்திட்டம் 7 ஆண்டுகள் கால அளவும் 42,500 எக்டேர் பரப்பளவில் ரூ.4172.00 இலட்சங்கள் செலவில் நடைபெற உள்ளது.1995–96 கால கட்டத்தில் ரூ.400.81 செலவில் 5160 எக்டேர் நிலம் உள்ளடக்கப்பட்டுள்ளது. 1996–97ல் ரூ.486.69 இலட்சங்கள் செலவில் 3600 எக்டேர் பரப்பில் இத்திட்டம் நடைபெற இருக்கிறது. திருநெல்வேலி திட்டம் போன்றே ஒரு டானிடா உதவி திட்டம் இராமநாதபுரம்.காமராசர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் 5½ ஆண்டுகளில் 11,000 எக்டேர் நிலம் பயனடையும். 1995–96ல் ரூ.174.32 இலட்சங்கள் செலவில் 1,500 எக்டேர் பரப்பில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. 1996–97 ல் ரூ.249.46 இலட்சங்கள் செலவில் 2,250 எக்டேர் பரப்பில் செயற்படவுள்ளது. நிலமேம்பாடு, மண் வளப்பாதுகாப்பு, நல்ல நிலம் தரிசாவதைத்தடுப்பது, தரிசு நிலத்தை வளம்கொழிக்கச் செய்தலும், நிலத்தை விரிவுபடுத்துதல் காய்கறி பயிரிடுதலும் வளர்ச்சியும் நீர்பிரிமுகடு நிர்வாக அணுகுமுறை மூலம் கிராமப்புற மக்களுக்கு வாழ்க்கைத் தொழில் வள ஆதாரத்திற்காகவும் வேளாண் உற்பத்தித் திறன் உயர்வுக்காகவுமாக இயக்க மையமாக இருக்கிறது. திட்டங்களினுடைய பெருக்கங்களின் மூலம் பல முயற்சிகளும், செலவுகளும் செய்யப்பட்டதை இது ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த பின்னணியில் பல ஆண்டுகளுக்கு மேலாகியும் பொது நல அல்லது நிலையான பயன் விளையவில்லை. உள்ளாட்சி நிறுவனங்களின் குறைபாடுகளும் உள்ளூர் சமுதாய பங்களிப்பு இன்மை உள்ளிட்டவை காரணங்களாகக் கண்டறியபட்டது. இத்தகைய திட்டங்களுக்கான பொறுப்பை 9ம் திட்ட அணுகுமுறை அறிக்கை ஆதரவளித்திருப்பதைப் போல ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்குதன் மூலம் தற்பொழுது இக்குறைபாடுகளை களைய முடியும்.

08. எட்டாவது திட்ட காலத்தில் மேற்கண்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ரூ.119.81 கோடி பயன்படுத்தப் பட்டிருக்கிறது. கீழே கண்ட அட்டவணையில் திட்ட தொடக்க ஆண்டும், 1992–97 கால கட்டத்திற்காகச் செய்யப்பட்ட செலவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சங்களில்)

| திட்டத்தின் பெயர் | திட்ட தொடக்க ஆண்டு | 1992-97 இல் செய்யப்பட்ட செலவு |
|---|---|---|
| 1. வறட்சி பாதித்த பகுதி திட்டம். | 1972–73 | 3,717.39 |
| 2. மானாவாரி தேசீய நீர்பிரிமுகடு திட்டம் | 1990–91 | 3,825.04 |
| 3. ஒருங்கிணைந்த நீர்பிரி முகடு | 1990–91 | 2,252.37 |
| 4. விரிவான நீர் பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம் | 1987–88 | 1888.29 |
| 5. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் | 1994–95 | 298.12 |
| மொத்தம் | | 11,981.21 |

09. ஊரகப் பகுதிகளில், வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு மண் மற்றும் நீர் நிருவாகம் வெற்றிகரமாக ஏழ்மையை ஒழிப்பதற்கான உயிர் நாடியாகும். 50% விழுக்காட்டிற்கு அதிகமாக விவசாய நிலம் மானாவாரியாகிக் கொண்டிருக்கிறது. விவசாய நிலம் மேலும் மேலும் விவசாயத்திற்கல்லாத நிலமாக மாற்றப்படுகிறது. வேளாண் உற்பத்தி ஒரு நிலையை அடைந்திருக்கிறது, தமிழ்நாட்டின் முக்கியதேவை இயற்கையோடு இணைந்த பயிர் வளர்க்கும் முறையாக மாற்றுவதற்காகக் பெரிய அளவிலான நில முன்னேற்றத் திட்டங்கள் உள்ளூர் மக்களின் முனைப்பான பங்கேற்புடன் ஒரு நிலையான அடிப்படையில் எடுத்துக் கொள்வதாக இருக்கிறது. நீர்பிரிமுகடு செயல் திறன் வளர்ச்சி பல ஆண்டுகளுக்கு மேலாக காலத்தின் சோதனையாக இருந்துள்ளது. பஞ்சாயத்து நிறுவனங்கள் மக்கள் அமைப்பாக இருக்கிறது, அவர்களுக்கு மிக நெருக்கமாகவும் இருப்பதுடன் இத்தகைய நில அடிப்படையிலான திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்தும் திறனுடையது. நிலமேம்பாடு, நீர்பிரிமுகடு மேம்பாடு ஆகியன சிறப்பான அமைவிடத்தையும் கூட்டு திட்டங்களைக் கொண்டவையாகவும் இருக்கின்றன. ஆகையால் அவைகளின் திட்டமிடலும் செயலாக்கமும் சிறந்த முறையில் ஆற்றப்படுவதற்கு அவற்றைப் பஞ்சாயத்து நிறுவனங்களிடம் ஒப்படைப்பதன் மூலம் சிறந்த நிலைத்த பலன்களைப் பெறுவதற்கு இயலும். இந்த பின்னணியில் நீர் பிரிமுகடு திட்டங்களில் ஊராட்சிகளை ஈடுபடுத்த மாநில திட்டக் குழுவின் பிரிவு கருதுவதுடன் கீழே கண்ட அதிகாரங்களை ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட பஞ்சாயத்துகளுக்கு வழங்கவும் பரிந்துரைக்கிறது.

## I. ஊராட்சி

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| i) நீர்பிரிமுகடு மேலாண்மை | i) நீர்பிரிமுகடு திட்டங்களின் அனைத்து நில / நீர் பயன் படுத்துவதை ஊராட்சி மூலம் (ஊர் அவை) ஏற்பளித்தல். |
| | ii) நீர்பிரிமுகடு வளர்ச்சித்திட்டத்தின் கீழ் மேம்பாட்டிற்காகவும் உற்பத்திப் பயனுக்காகவும் சமுதாய நிலம் மற்றும் ஏனையப் பொதுச் சொத்துக்களை முறையாகப் பயன்படுத்துவதனை அமைத்தல். |
| | iii) நீர் பிரிமுகடு பணிகளை மேற் பார்வையிடுதலுக்கும் தரத்தைக் கண்காணிப்பதற்கும் உதவி செய்தல். |

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| | | iv) | இயற்கை வள ஆதாரங்களும் சுற்றுசூழல் வளர்ச்சியும் எல்லாப் பகுதியிலும் நல்ல முறையில் நிருவகிக்கப்படுவதற்கான நீர்பிரிமுகடு வளர்ச்சி அணுகு முறையை மேம்படுத்துதல். |
| II) | நில மேம்பாடு | i) | சிற்றூராட்சிகளுக்கான விரிவான நில மற்றும் நீர் பயன்பாட்டுத் திட்டம் வரைதல். |
| | | ii) | கிராமத்தில் உள்ள எல்லா விவசாய நிலங்களுக்கான மண் வள அட்டைகளுக்கு ஏற்பாடு செய்தல். |
| | | iii) | சிற்றூராட்சி சூழலுக்கு ஏற்றவாறு மரம் உள்ளிட்ட பயிர்களைக் கண்டறிதல் |
| | | iv) | புன்செய் நிலங்களிலும் மானாவாரி பகுதியிலும் சிறந்த மண் மற்றும் நீர்வளத்தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல். |

## II. ஊராட்சி ஒன்றியம்

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| I | நீர்பிரிமுகடு மேம்பாடு | i) | ஊராட்சிகளுடன் தொடர்புடைய பகுதித் திட்டங்கள் ஏதேனுமிருப்பின் நீர்பிரி முகடு திட்டத்திற்குத் திட்டமிடலும் ஒருங்கிணைத்தலும். |
| | | ii) | பணிக்குழுக்கள் பயன்படுத்தோர் குழுக்கள் மற்று நீர் பிரிமுகடு குழுக்கள் ஆகியவற்றை மக்கள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்தல். |
| | | iii) | நீர்பிரிமுகடு திட்டங்களின் செயல்பாட்டில் சிற்றூராட்சிகளுக்கு உதவ ஒரு தொழில் நுட்பப்பணியாளர் குழு அமைத்தல். |
| | | iv) | ஊராட்சி ஒன்றியங்களில் செயற் படுத்தப்படும் அனைத்து நீர் பிரிமுகடு திட்ட முன்னேற்றத்தைக் கண் காணித்தல் மேற் பார்வையிடுதல் மற்றும் ஆய்வு செய்தல். |
| ii. | நில மேம்பாடு | i) | வேளாண்மைச் சூழல், வட்டாரத் திட்டமிடுதல் மற்றும் தொலை உணர்வு விவரத்திட்ட அடிப்படைகளைக் கொண்டு நில மற்றும் நீர் மேலாண்மைத் திட்டங்கள் வரைய ஏற்பாடு செய்தல். |
| | | ii) | மண் நல அட்டைகள் பெறுவதற்கு ஊராட்சிகளுக்காக நிறுவன இணைப்புகளை ஏற்படுத்துதல். |
| | | iii) | ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பயிர் மற்றும் நில அடிப்படையிலான பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்து, தகுந்த பயிர்த் திட்டத்தை மேம்படுத்துதல் |
| | | iv) | நவீன மண், நீர் பாதுகாப்பு மற்றும் நில மேம்பாட்டு தொழில் நுட்பங்களை பயன்படுத்த விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல். |

## III. மாவட்ட ஊராட்சி

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| I. நீர் பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம், நில மேம்பாடு மற்றும் மண்வள பாதுகாப்பு | i) மாவட்டங்களுக்கான நிலம், மண் மற்றும் நீர் வள ஆதார விபரங்களை மேம்படுத்துதலும் நீர்பிரி முகடு மேம்பாட்டுக்கான தொலை நோக்குத் திட்டங்களைத் தயாரித்தலும். |
| | ii) மாவட்டத்தின் நீர்பிரிமுகடு மேம்பாட்டு திட்டங்களை ஆய்வு செய்தலும் கண்காணித்தலும். |
| | iii) மாநிலத்தின் ஏனைய மாவட்டங்களின், நாட்டின் நீர்பிரிமுகடு மேம்பாடு பற்றிய அனுபவங்களை ஆராய்ந்து அப்படிப்பினையை ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கும், சிற்றூராட்சிகளுக்கும் பரப்புதல் |

**நிர்வாக சிக்கல்கள்:**

10. நீர் பிரிமுகடு மேம்பாட்டுச் செயலாக்க திறனுடன் மானாவாரி பகுதி தேசிய நீர்பிரிமுகடு மேம்பாடு திட்டம், வறட்சி பகுதித் திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்துவதில் வேளாண்மைத் துறை முக்கிய முகவராக இருக்கிறது. பல ஊராட்சி ஒன்றியங்களில் மானாவாரி பகுதி தேசிய நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டப்பணிகளுக்கு வேளாண் துறை உதவி இயக்குநர்கள் முழு பொறுப்பேற்று இருக்கின்றனர். ஒரு சிறிய உதவி அலுவலகம் அவர்களிடம் உள்ளது. இந்த நிர்வாக அலகு, மானாவாரி பகுதி தேசிய நீர்பிரிமுகடு மேம்பாட்டுத்திட்ட செயலாக்கத்திற்காக, ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட வேண்டும். நீர்பிரிமுகடு அடிப்படையில் 80 வட்டாரங்களில் (ஊராட்சி ஒன்றியங்கள்) வறட்சி பாதித்த பகுதித் திட்டங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக செயற்படுத்தும் அலுவலர்கள் அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டிருக்கிறார்கள். எல்லா வறட்சி பாதித்த பகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்காக, எல்லா வறட்சி பாதித்த பகுதி மேம்பாட்டுத் திட்ட அலுவலர்களாக மாற்று பணிபுரிய எந்த அரசு துறையிலிருந்து அனுப்பப்பட்டவர்களாயினும் பொருட்படுத்தாமல் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். மாநில அளவில் வறட்சி பாதித்த பகுதி மேம்பாட்டு திட்ட அலுவலர் வேளாண் துறையில் தொடர்ந்து இருக்க வேண்டும். விரிவான நீர்பிரிமுகடு மேம்பாட்டு திட்டத்தைப் பொறுத்தவரையில் அரசுசாரா நிறுவனங்களையும் நீர்பிரிமுகடு பயனாளர்கள் குழுமத்தையும் திட்ட செயலாக்கத்தில் ஊக்குவிக்க தனித்திட்ட இயக்குநர்களை வேளாண் பொறியியல் துறை பெற்றிருக்கிறது. இந்த பின்னணியில், உள்ளாட்சி அமைப்புகளுடன் வேளாண் பொறியியல் துறை அலுவலர்களை இணைக்கும் நிலை இருக்கவில்லை.

11. அவ்வாறு ஊராட்சி ஒன்றியத்தில் இணைக்கப்பட்டுள்ள எல்லா அரசு அலுவலர்களும் தொடர்ந்து அரசப்பணியாளர்களாகவே இருக்க வேண்டும் என்பதுடன் அரசு அலுவலர்களுக்குப் பொருந்தக்கூடிய, தேவையான வசதிகளையும் அவர்கள் பெறுவர். ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு இணை நிறுவனம் உண்டாக்கக் குழுமம் கருதவில்லை. ஏனெனில், எல்லா நீர் பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டங்களும் குறிப்பிட்ட பகுதிகளுக்குறியவை. மேலும், அவை ஒரு காலவரையறைக்குட்பட்டுச் செயல்படுத்தப்படவேண்டியவை. திட்டங்கள் முடிவுறும் பொழுது வேளாண்மை மற்றும் பிற துறைகளிலிருந்து மாற்றுப் பணியில் ஊராட்சி ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டவர்கள் திரும்பவும் தாய்த்துறைக்கு அனுப்பப்படுவார்கள். சிற்றூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் நீர்பிரிமுகடு மேம்பாட்டு திட்டங்களைத் திறம்பட செயற்படுவதற்காக தொடர்புடைய ஏனைய அரசு துறைகளிடமிருந்து தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

**நிதிச் சிக்கல்கள்:**

12. இந்த எல்லா நீர்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்ட நிதிகள் முழுமையாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என மாநில திட்ட குழு கருதுகிறது. ஒவ்வொரு திட்டங்களின் கீழும் அனுமதிக்கத்தக்க நிர்வாகச் செலவு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். வறட்சி பாதித்த பகுதி மேம்பாட்டுதிட்டம், மானாவாரி பகுதி தேசிய நீர்பிரி முகடு திட்டம், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் போன்ற வேளாண் துறையின் கீழ் வரும் இத்திட்டங்களுக்காகக் கிடைக்கப்பெறும் நிதிகள் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

**சட்டச் சிக்கல்கள் :**

13. சில நவீன தொழில் நுட்பங்களும், செயல் திறனும், நோக்கங்களும் மண் மற்றும் நீர் பாதுகாப்பிற்காகவும் நிர்வாகத்திற்காகவும் இணைத்து மேற்கொள்வதற்காக மாநிலத்தில் இருக்கும் தமிழ்நாடு நில மேம்பாட்டுச் சட்டத்திற்குத் திருத்தம் தேவைப்படுகிறது. நீர் பிரிமுகடு மேம்பாட்டு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுவதற்கு ஊராட்சி அமைப்புகளிலிருந்து மக்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இவ்வாறாக மேற் குறிப்பிட்ட கருத்துக்களைச் சேர்ப்பதற்கு நில மேம்பாட்டு சட்டம் திருத்தப்பட வேண்டும்.